விடுதிகள், 5 மாணவியர் விடுதிகள் ஆகியன இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. இந்தக் கல்வியாண்டிலேயே நீங்கள் கேட்கக்கூடிய கோரிக்கையும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 3 முதல் 7 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. உலக தாய்மொழி நாள்–உறுதிமொழி எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று உலக தாய்மொழி நாள். உலகெங்கும் உள்ள மக்களுக்கு முக்கியமானதும், அவர்களுடைய மனதிற்கு நெருக்கமானதும் ஒன்று உண்டென்றால், அது அவர்களுடைய தாய்மொழிதான். அந்தவகையில், உலக மொழிகளில் தொன்மை வாய்ந்ததும், முதன்மையானதுமான செம்மொழியாம் நம் தாய்மொழி தமிழ்மொழியைப் போற்றி வணங்கும் வகையில் நாம் அனைவரும் எழுந்து நின்று, பின்வரும் உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உறுதிமொழி வாசகங்களை படிக்க படிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் திரும்பச் சொல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

> "எங்கும் தமிழ்
> எதிலும் தமிழ்
> எப்போதும் தமிழ்
> என்ற நடைமுறையைக்
> கொண்டுவரப் பாடுபடுவோம்.

@ 327 முதல் 675 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2024 பிப்ரவரி 21] [பேரவைத் தலைவர்]

தேமதுர தமிழோசை
உலகெங்கும் ஒலிக்க
எந்நாளும் உழைத்திடுவோம்.
அனைத்து ஆவணங்களிலும்
தமிழிலேயே
கையொப்பமிடுவோம்.
குழந்தைகளுக்குத்
தமிழ் மொழியில்
பெயர் சூட்ட
பரப்புரை செய்திடுவோம்.
இணையற்ற தமிழுடன்
இணையத் தமிழையும்
காத்து வளர்ப்போம் என்று
உலக தாய்மொழி நாளான இன்று
உளமார உறுதி கூறுகிறேன்."

(மாண்புமிகு பேரவைத் தலைவர் உறுதிமொழி வாசகங்களைப் படிக்க படிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் அதனைத் திரும்பச் சொல்லி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.)

4. அறிவிப்புகள்

(அ) 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டப் பணிகளின் விவரம், உறுப்பினர்களின் சிறு கணினிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7-5-2022 அன்று விதி 110-ன்கீழ் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டம் அறிவிக்கப்பட்டு, திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவரவர்கள் தொகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய 10 முக்கிய திட்டங்கள் குறித்துத் தெரிவிக்குமாறு கடிதம் மூலமாகக் கேட்டுக்கொண்டார்கள். 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், 2023-2024 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படும் பணிகள்